# 24-12-2024 செய்தி

## தேசிய மனித உரிமைகள் ஆணையத் தலைவர் நீதிபதி வெ.ராமசுப்ரமணியன்

**என்எச்ஆர்சிக்கு தமிழகத்திலிருந்து முதல் தலைவர் !**

- தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் (என்ஹெச்ஆர்சி) ஒன்பதாவது தலைவராக உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி வெ. ராமசுப்ரமணியன் நியமிக்கப்பட்டார்.
- 2006-ஆம் ஆண்டு சென்னை உயர்நீதிமன்றத்தின் கூடுதல் நீதிபதியாக நியமிக்கப்பட்ட இவர், 2019-ஆம் ஆண்டில் தெலுங்கானா உயர்நீதிமன்ற நீதிபதியாக பதவி வகித்தார்.
- அதைத் தொடர்ந்து ஹிமாசல பிரதேச உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக பொறுப்பேற்றார்.
- 2019-இல் இருந்து 2023 வரை உச்சநீதிமன்ற நீதிபதியாக பதவி வகித்தார்.
- 'என்ஹெச்ஆர்சி தலைவராக முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி வெ. ராமசுப்ரமணியன், உறுப்பினர்களாக ஸ்ரீ பிரியங்கனூங்கோ, முன்னாள் நீதிபதி வித்யுத் ரஞ்சன் சாரங்கி ஆகியோரை குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு நியமித்துள்ளார்'.
- என்ஹெச் ஆர்சியின் அடுத்த தலைவரை தேர்ந்தெடுப்பதற்காக பிரதமர் மோடி தலைமையில் உயர்நிலைக் குழுக் கூட்டம் நடைபெற்றது.
- இந்தக் கூட்டத்தில் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி, மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவரும் காங்கிரஸ் தலைவருமான மல்லிகார்ஜுன கார்கே உள்ளிட்டோர் பங்கேற்றனர்.
- தேசிய மனித உரிமைகள் ஆணையம் 1993, அக்டோபர் 12-ஆம் தேதி நிறுவப்பட்டது. அப்போதிலிருந்து இந்த அமைப்பின் தலைவராக உச்சநீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற தலைமை நீதிபதிகள் நியமிக்கப்படுவது வழக்கமாக இருந்து வருகிறது.

## தொடரும் உறவு; வளரும் நெருக்கம்!

- 1961-இல் அப்போதைய பிரதமர் இந்திரா காந்திக்குப் பிறகு, 43 ஆண்டுகள் கழித்து குவைத்துக்கு அரசு முறைப் பயணம் மேற்கொண்டிருக்கிறார்.
- பிரதமர் மோடிக்கு குவைத் நாட்டின் உயரிய விருதான 'தி ஆர்டர் ஆஃப் முபாரக் அல்-கபீர்' அந்த நாட்டு மன்னரால் வழங்கப்பட்டிருப்பதிலிருந்து, எந்த அளவுக்கு இந்தியாவுக்கு குவைத் முக்கியத்துவம் அளிக்கிறது என்பது தெரிகிறது.
- பாரசீக வளைகுடாவின் வடகிழக்கு முனையில் அமைந்திருக்கிற ஈராக், சவூதி, அரேபியா நாடுகளின் எல்லையை ஒட்டி அமைந்துள்ள வளைகுடா நாடான குவைத் ஜனநாயகத்தை ஏற்றுக்கொண்ட ஒரே ஒரு மன்னராட்சி நாடும் அந்தப் பகுதியில் குவைத் மட்டுமே.
- 1961-இல் பிரிட்டனில் இருந்து முழுமையாகத் தன்னை விடுவித்துக் கொண்டு சுதந்திர நாடானபோது, குவைத்தை அங்கீகரித்து அந்த நாட்டுடன் தூதரக உறவு ஏற்படுத்திய முதல் நாடு இந்தியா.
- அது மட்டுமல்ல, 1961 வரை குவைத்தின் அதிகாரபூர்வ செலாவணியாக இந்திய ரூபாய்தான் இருந்து வந்தது.
- குவைத்தின் கச்சா எண்ணெய் உற்பத்தியில் இந்தியாவுக்குக் கணிசமான பங்கு உண்டு. இந்திய தொழில்நுட்ப வல்லுநர்களும், நிறுவனங்களும்தான் குவைத்தின் கச்சா எண்ணெய் உற்பத்தி நிலையங்கள் வெற்றிகரமாக இயங்கக் காரணம் வர்த்தகம், முதலீடு, எரிசக்தி, பாதுகாப்பு, சுகாதாரம், கல்வி, தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்டவற்றில் இந்தியாவும் குவைத்தும் இணைந்து செயல்படுகின்றன என்றாலும், அவற்றை மேலும் அதிகரிக்க பிரதமரின் அரசு முறைப் பயணம், புதிய பாதையை வகுத்திருக்கிறது.
- இந்தியா-குவைத் இடையே பாதுகாப்புத் துறை ஒத்துழைப்புக்கான ஒப்பந்தம் உள்பட நான்கு முக்கிய ஒப்பந்தங்கள் கையொப்பமாகி இருக்கின்றன.
- பாதுகாப்பு, கலாச்சாரம், விளையாட்டு, சூரிய மின்சக்தி ஆகியவை அதில் அடங்கும்.
- இருதரப்பு நல்லுறவை வியூகக் கூட்டாண்மை (ஸ்ட்ராடஜிக் பார்ட்னர்ஷிப்) நிலைக்கு உயர்ந்த பிரதமர் மோடியும், குவைத் மன்னரும் முடிவெடுத்திருப்பது மிக முக்கியமான ராஜதந்திர வெற்றி.
- எல்லை தாண்டிய பயங்கரவாதம் உள்பட அனைத்து விதங்களிலான பயங்கரவாதமும் சந்தேகத்துக்கு இடமின்றி கண்டனத்துக்குரியவை பயங்கரவாதிகளுக்கு நிதி, புகலிடம் கிடைப்பதைத் தடுப்பதோடு, பயங்கரவாதக் கட்டமைப்பை வலுவிழக்கச் செய்ய இருநாடுகளும் உறுதி ஏற்கின்றன" என்கிற கூட்டறிக்கை பாகிஸ்தானுக்கு விடப்பட்டிருக்கும் மறைமுகக் கண்டனம்.
- குவைத்தில் வாழ்வது 49 லட்சம் பேர் என்றால், அதில் சுமார் 10 லட்சம் பேர் இந்தியர்கள் குவைத்தில் எந்தப் பணியாக இருந்தாலும் இந்தியத் தொழிலாளர்களுக்குத்தான் முன்னுரிமை அளிக்கப்படுகிறது.
- குவைத்தீல் உள்ள 25 பள்ளிக்கூடங்களில் படிக்கும் 60,000 மாணவர்கள், இந்தியாவின் சி.பி.எஸ்.இ. பாடத் திட்டத்தின் அடிப்படையில்தான் படிக்கிறார்கள்.